# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.212/2025**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | தலைமை காவலர் 1389 |
| பெயர் | - | திரு.சரவணன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | ராமசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | டவுன் கிழக்கு காவல் நிலையம், பொள்ளாச்சி | வயது | - | 45/2026 |
| சாதி | - | | | | |

**20-01-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பொள்ளாச்சி டவுன் கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.02.2025-ம் தேதி மாலை 14.30 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது, நிலைய உதவி ஆய்வாளர் திரு. ரவி அவர்களுக்கு உதவியாக நானும், தலைமைக் காவலர் 322 திரு.மணிகண்டன் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சோலையார் டேம், உருளிக்கல், மானாம்பள்ளி மற்றும் முருகாளி பஜார் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 14.30 மணிக்கு முருகாளி போஸ்ட் ஆபிஸ் பின்புறம் கண்காணித்தபோது அங்கு கையில் பையுடன் நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் பெரியசாமி (வயது 59), த/பெ.பட்டாபிராம், முருகாளி பஜார், ஷேக்கல்முடி, வால்பாறை எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட Vorion brandy என லேபிள் ஒட்டப்பட்ட 08 பாட்டில்களை ஆஜர்படுத்தி விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்பு 15.15 மணிக்கு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய உதவியாக

இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரி மற்றும் தடய பொருட்களுடன் 15.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 04/2025, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க உதவியாக இருந்தோம். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் எந்த தேதியில் ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக பணியில் சேர்ந்தேன். தேதி சரியாக நினைவில்லை. சம்பவநாளான 16.02.2025 என்பது ஞாயிற்று கிழமை என்றால் ஞாபகமில்லை. அந்த நாளில் சம்பவயிடமான முருகாளி போஸ்ட் ஆபிஸ் பின்புறம் என்பது ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் இல்லை. எதிரியை நாங்கள் பார்க்கும் போது எதிரியுடன் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை நீதிமன்றத்தில் கைப்பற்றி ஆஜர் படுத்தியுள்ளோமா என்றால் ஆய்வாளருக்கு தான் அதுபற்றி தெரியும். எதிரியிடமிருந்து மதுபானத்தை விற்று வைத்திருந்ததாக பணம் எதுவும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரியிடம் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம்நபருக்கு எதிரி மது பானத்தை விறப்னை செய்யும் போது கையும் களவுமாக பிடித்தோமா என்றால் இல்லை. எதிரி மீது தனி நபர் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை கைப்பற்றி அழித்தோமா என்றால் ஆமாம். அழிக்கும் போது உதவி ஆய்வாளர் அங்கு இருந்தார். நானும் உடனிருந்தேன். மதுபானத்தை அழித்துவிட்டு காலி பாட்டில்களை என்ன செய்தோம் என்றால் உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். தனி நபர் சாட்சியை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புள்ளிவிவரக் கணக்கிற்காக பதிவு செய்த வழக்றிக்கு வலுவூட்ட நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.